# எமது இலங்கை

6

(மாலா, மேரி, கோகிலா மூவரும் சிறுவர் சஞ்சிகையைப் படித்துக் கொண்டிருக்கின்றனர்.)

**மேரி** :- சிறுவர் சஞ்சிகைகளில் வரும் படக்கதை எனக்கு மிகவும் பிடிக்கும்.

**கோகிலா** :- ''கண்டுபிடிப்பு'' பகுதிதான் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**மாலா** :- எனக்குப் பிடித்தது ''வரைந்து பார்'' பகுதிதான். நான் அதில் வர்ணம் தீட்டுவேன்.

**மேரி** :- நாம் மூவரும் சேர்ந்து இது போன்ற சஞ்சிகை ஒன்றைத் தயாரிப்போமா?

**மாலா** :- தயாரிக்கலாமே! நான் பாடல்களையும் சிறு சிறு துணுக்குகளையும் எழுதுகின்றேன்.

**மேரி** :- நான் படங்கள் வரைகின்றேன்.





இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**கோகிலா** :- நான் ஒரு கதை எழுதுகிறேன்.

**மாலா** :- சரி, நமக்குத் தெரிந்தவற்றைப் பெரிய தாளில் எழுதுவோம். எல்லோரினதும் ஆக்கக்களையும் ஒன்று சேர்த்து ஒரு சஞ்சிகை ஆக்குவோம்.

**மேரி** :- சஞ்சிகைக்கு எமது இலங்கை என்று பெயர் வைப்போமா?

**மாலா** :- ஓ..... வைப்போம் நன்றாக உள்ளது.

**கோகிலா** :- நம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் குழுக்களாகப் பிரிவோம். மாதம் ஒரு சஞ்சிகை தயாரிப்போம்.

**மேரி** :- அப்படியே செய்வோம்.

**கோமாளி** විකටයා

சின்னச் சின்னக் கல் அடுக்கி
சிங்காரக் கோட்டை கட்டி
கோட்டை மேலே ஏறிக்கொண்டு
கோமாளி வேசம் போட்டுக்கொண்டு
தில்லாலே! தில்லாலே
நன்றாய்ப் பாரு கண்ணாலே.

- **மாலா**

**ரோஜா** රෝසා

சிவப்பு வண்ண ரோஜா
சிரிக்கும் வண்ண ரோஜா
எங்கள் பள்ளி அதிபருக்குப்
பிடித்த நல்ல ரோஜா

-**மேரி** -



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**கதை** කතන්දරය

தோட்டத்தில் ஒரு கிளி இரையைத் தின்று கொண்டிருந்தது. அங்கு வந்த நாதன் கிளியைப் பிடித்தான். வீட்டுக்குள் கொண்டு சென்றான். கூட்டினுள் அடைத்தான். சாப்பிடப் பழம் கொடுத்தான். கிளி சாப்பிடவே இல்லை. ‘‘கீச் கீச்’’ என்று கத்திக் கொண்டே இருந்தது. கூட்டினுள் அங்கும் இங்குமாகப் பறந்தது. அங்கு வந்த நாதனின் அக்கா கவிதா ‘‘அய்யோ, பாவம்!’’ கிளியை விட்டு விடு அது தன் வீட்டிற்குச் செல்லட்டும் என்றாள். நாதன் கூட்டைத் திறந்தான். கிளி சந்தோஷமாகப் பறந்து சென்றது.

- **பாத்திமா** -

**விடுகதை** ගැටපදය

(1) பச்சைப் பச்சை ராணிக்கு
வெள்ளை வெள்ளை
முத்துக்கள் அது என்ன?
.......................................

(2) கழுத்துண்டு தலையில்லை
கையுண்டு விரல் இல்லை.
அது என்ன?
.......................................

- கோகிலா-



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## பாடத்தில் வந்த சில சொற்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | - | සඟරාව |
| கண்டுபிடிப்பு | - | සොයා ගැනීම |
| விகிடத் துணுக்குகள் | - | විකට කියමන් |
| குழுக்கள் | - | කණ්ඩායම |
| வரைகிறேன் | - | අඳින්නෙමි |
| எழுதுகிறேன் | - | ලියමි |
| தாள் | - | කඩදාසිය |
| பிரிவோம் | - | වෙන්වෙමු |

**கிரகித்தற் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
**පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.**

01. சஞ்சிகையைத் தயாரித்தவர்கள் யாவர்?
02. அவர்கள் சஞ்சிகைக்கு வைத்த பெயர் என்ன?
03. சஞ்சிகையில் இடம் பெற்ற விடயங்கள் எவை?
04. கோகிலா சஞ்சிகைக்கு என்ன எழுதினாள்?
05. சஞ்சிகைக்குப் படங்களை வரைந்தவர் யார்?

### செயற்பாடு I

எமது இலங்கை என்ற சஞ்சிகையில் உள்ள விடயங்களைக் கவிதையாக கதையாக வாசித்துப் பழகுங்கள்.

### செயற்பாடு II

குழுக்களாகச் சேர்ந்து ஒத்தொலிக்கும் ஓசைகளை அடிப்படையாகக் கொண்டு நான்கு வரிக் கவிதை ஒன்றினை ஆக்குங்கள்.

**உதாரணம்:-**

சின்ன சின்னப் பொம்மை
சிங்காரப் பொம்மை
அம்மா தந்த பொம்மை
அழகான பொம்மை.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு III

எமது இலங்கை என்ற உரையாடலைக் குழுக்களாக உரையாடிப் பழகுங்கள்.
අපේ ලංකා යන දෙබස කණ්ඩායම් වශයෙන් කරන්න.
தன்மை ஒருமை, பன்மை, எதிர்காலத்தில் அமையும் வடிவங்களை அறிவோம்.

**உதாரணம்** :-நான் படிப்பேன்.
நாங்கள் படிப்போம்.

## செயற்பாடு IV

1. நான் பிரிவேன்.
   நாங்கள் --------------------------------
2. நான் ------------------------------------
   நாங்கள் தயாரிப்போம்.
3. நான் செய்வேன்.
   நாங்கள் --------------------------------
4. நான் ------------------------------------
   நாங்கள் வரைந்தோம்.
5. நான் எழுதினேன்.
   நாங்கள் ----------------------------------

## செயற்பாடு V

நிகழ்காலத்தில் அமையும் வடிவங்களை அறிவோம்.

**உதாரணம்:-**
நான் தீட்டுகின்றேன்.
நாங்கள் தீட்டுகின்றோம்.

**இடைவெளியை நிரப்புக.**

1. நான் பிரிகின்றேன்.
   நாங்கள் ------------------------------------
2. நான் ------------------------------------------
   நாங்கள் தயாரிக்கின்றோம்.
3. நான் செய்கின்றேன்.
   நாங்கள் --------------------------------------

4. நான் -------------------------------------------
நாங்கள் வரைகின்றோம்.

5. நான் எழுதுகின்றேன்.
நாங்கள் -------------------------------------

## செயற்பாடு VI

நீங்கள் பாடுவீர்கள்.
அவன் பாடுவான்.
அவள் பாடுவாள்.
அவர் பாடுவார்.

### இடைவெளி நிரப்புக

01. நீங்கள் தயாரிப்பீர்கள்.
அவன் ---------------------------------
அவள் --------------------------------
அவர் ----------------------------------

02. நீங்கள் -------------------------------------
அவன் வரைவான்.
அவள் ------------------------------------
அவர் -------------------------------------

03. நீங்கள் -------------------------------------
அவன் ------------------------------------
அவள் எழுதுவாள்.
அவர் ------------------------------------

04. நீங்கள் -------------------------------------
அவன் ------------------------------------
அவள் ------------------------------------
அவர் செய்வார்.


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

05. நீங்கள் செய்வீர்கள்.
அவன் -------------------------------------
அவள் -------------------------------------
அவர் ---------------------------------------

## செயற்பாடு VII

நிகழ்காலத்தில் அமையும் வசன அமைப்புக்களைப் பார்ப்போம்.

நீங்கள் - தயாரிக்கின்றீர்கள்.
அவன் - தயாரிக்கின்றான்.
அவள் - தயாரிக்கின்றாள்.
அவர் - தயாரிக்கின்றார்.

நீங்கள் - ----------------------------------
அவன் - வரைகின்றான்.
அவள் - ----------------------------------
அவர் - ----------------------------------

நீங்கள் - ----------------------------------
அவன் - ----------------------------------
அவள் - ----------------------------------
அவர் - வாசிக்கின்றார்.

நீங்கள் - ----------------------------------
அவன் - ----------------------------------
அவள் - எழுதுகின்றாள்.
அவர் - ----------------------------------

நீங்கள் - செய்கின்றீர்கள்.
அவன் - ----------------------------------
அவள் - ----------------------------------
அவர் - ----------------------------------

நீங்கள் - ----------------------------------
அவன் - பாடுகின்றான்.
அவள் - ----------------------------------
அவர் - ----------------------------------


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு VII

**எதிர்காலம்**

அது பற**க்கும்.**
அவை பற**க்கும்.**

01. அது தின்னும்.
அவை --------------------------------

02. அது ----------------------------------
அவை செல்லும்.

03. அது ஓடும்.
அவை ------------------------------

04. அது -------------------------------
அவை------------------------------

05. அது பாடும்.
அவை ------------------------------

## செயற்பாடு VIII

**நிகழ்காலம்**

அது பறக்**கின்றது.**
அவை பறக்**கின்றன.**

01. அது தின்கின்றது.
அவை -------------------------------

02. அது ----------------------------------
அவை செல்கின்றன.

03. அது ஓடுகின்றது.
அவை --------------------------------

04. அது -----------------------------------
அவை சுற்றுகின்றன.

05. அது பாடுகின்றது.
அவை -------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## தன்மை , முன்னிலை , படர்க்கை

| | | |
|---|---|---|
| **தன்மை** | ➔ | நான், நாம், நாங்கள். |
| **முன்னிலை** | ➔ | நீ, நீங்கள் |
| **படர்க்கை** | ➔ | அவர், அவன், அவள் அது, அவை, அவைகள். |

**குறிப்பு :**

இரண்டாம் மொழியாகத் தமிழை கற்கும் மாணவாகளுக்கு மேலே காட்டப்பட்டுள்ள அறிமுகம் போதுமானது. விரிவான இலக்கண விளக்கங்கள் அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தும்.

### செயற்பாடு IX

**தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற சொற்களை எழுதுக.**

(1) -------------------------------------------- பாடம் படித்தேன்.

(2) -------------------------------------------- பாடம் படித்தாய்.

(3) ----------------------------------------- பாடம் படித்தான்.

(4) --------------------------------------- ஓடி விளையாடுகிறேன்.

(5) --------------------------------------- ஓடி விளையாடுகின்றாய்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

(6) -------------------------------------------- ஓடி விளையாடுகின்றாள்.

(7) -------------------------------------------- கோவிலுக்குச் செல்வோம்.

(8) -------------------------------------------- கோவிலுக்குச் செல்கின்றோம்.

(9) -------------------------------------------- கோவிலுக்குச் செல்வீர்.

(10) ------------------------------------------- எங்கு சென்றாய்?

(11) ------------------------------------------- எங்கு சென்றார்கள்?

(12) ------------------------------------------- எங்கு ஓடியது.

(13) ----------------------------------------- தாவி ஓடியது.

(14) ------------------------------------------ வேகமாகப் பறந்தன.

(15) ------------------------------------------ வீடா?